பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 06 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- பிரதமர் திரு நரேந்திரமோடி பீகார் மாநிலத்திற்கு இன்று பயணம் மேற்கொள்கிறார்.
- பொதுமக்களுக்கு நம்பகத்தன்மை கொண்ட செய்திகள் அளிக்கப்படுவதை இந்திய தகவல் பணி அதிகாரிகள் உறுதிபடுத்த வேண்டுமென்று குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.
- விவசாயிகளின் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் தமிழக விவசாயிகள் அதிக அளவில் பயனடையச் செய்ய வேண்டுமென்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாக மத்திய இணை அமைச்சர் சோபா கரந்த்லாஜே தெரிவித்துள்ளார்.
- ஒடிஸா மாநில சட்டப்பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நேற்று பதவியேற்றுக் கொண்டனர்.
- உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் சூப்பர் எட்டு சுற்று ஆட்டங்கள் இன்று தொடங்குகிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி பீகார் மாநிலத்திற்கு இன்று பயணம் மேற்கொள்கிறார்.

நாலந்தா மாவட்டத்தில் உள்ள நாலாந்தா பல்கலைக்கழகத்தின் புதிய வளாகத்தை அவர் திறந்து வைக்கிறார்.

இந்த வளாகம் 450 எக்கர் பரப்பளவில் நவீன கலை அம்சங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

சூரிய மின்சக்தி, குடிநீர் சுத்திகரிப்பு ஆலை உள்ளிட்ட வசதிகள் இதில் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் பீகார் ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர், முதலமைச்சர் திரு நிதிஷ்குமார், வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடியை, கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி நேற்று சந்தித்து பேசினார்.

அப்போது கடற்படையின் கட்டமைப்பு, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு செயல்பட்டு நடவடிக்கைகளை அவர் எடுத்துரைத்தார்.

கடல்சார் பாதுகாப்பில் கடற்படை உறுதியுடன் இருப்பதாக அவர் பிரதமரிடம் கூறினார்.

கடற்படையினரின் பயிற்சி, அவர்களுக்கான நலன்கள் குறித்தும் அட்மிரல் தினேஷ் திரிபாதி எடுத்துரைத்தார்.

[]<<<>>>[]

பொதுமக்களுக்கு நம்பகத்தன்மை கொண்ட செய்திகள் அளிக்கப்படுவதை இந்திய தகவல் பணி அதிகாரிகள் உறுதிபடுத்த வேண்டுமென்று குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த தகவல் பணி பயிற்சி அதிகாரிகளிடையே அவர் உரையாற்றினார்.

இந்திய தகவல் பணி அதிகாரிகள் மக்களுக்கும் - அரசுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட வேண்டுமென்று அவர் தெரிவித்தார்.

தகவல் சேவை வலிமை வாய்ந்தது என்றும், போலியான செய்திகள் பெரும் பிரச்சினையை உருவாக்கும் என்றும் அவர் கூறினார்.

ஏனவே உண்மையான செய்தி அளிக்கப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டுமென்று திரு ஜக்தீப் தன்கர் அறிவுறுத்தினார்.

[]<<<>>>[]

விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் வகையில் மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

திருவண்ணாமலையில் விவசாயிகளின் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் பிரதமர் நிதி விடுவிக்கும் நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகள் உற்பத்தி செய்த சிறு தானியங்களை பதப்படுத்தி மதிப்புக் கூட்டுப் பொருளாக மாற்றி ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகக் கூறினார்.

வேளாண் பணிகளுக்கு ட்ரோன் பயன்பாடு குறித்து மகளிருக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் அப்பணிகள் மேம்படும் என்று திரு எல் முருகன் தெரிவித்தார்.

பிரதமர் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் நிதி விடுவிக்கும் நிகழ்ச்சியை காணொலி வாயிலாக நாமக்கல்லில் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை இணை அமைச்சர் **Shobha Karandlaje** பங்கேற்றார்.

பின்னர் விவசாயிகளிடையே உரையாற்றிய அவர், பிரதமர் திரு நரேந்திரமோடி விவசாயிகளுக்கு உயர் முன்னுரிமை அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தில் இந்த திட்டத்தின் கீழ் அதிக அளவில் விவசாயிகளை பயனடையச் செய்ய வேண்டுமென்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருவதாக் கூறினார்.

ஏவ்வித பாகுபாடுமின்றி தகுதியுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பிரதமரின் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டு வருவதாகவும் சோபா **Karandlaje** தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

அஞ்சல் அலுவலகச் சட்டம்-2023 நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

இது 1898-ஆம் ஆண்டு சட்டத்திற்கு மாற்றாகும்.

புதிய சட்டத்தின்படி பாதுகாப்பு கருதி சில தருணங்களில் அஞ்சல் அலுவலகங்களிலிருந்து அனுப்பப்படும் பார்சல்களை அரசு அதிகாரிகள் சோதனையிட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தேவைப்பட்டால் அந்த பார்சல்களை விநியோகம் செய்யும் நடவடிக்கையை நிறுத்தி வைக்கவும், தவறான பொருட்களை அழிக்கவும் இந்த சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நடந்த நிதி ஆண்டில் வரி வருவாய் அதிகரித்துள்ளதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 17-ஆம் தேதி வரை நேரடி வரி வருவாய் ஐந்து லட்சத்து 15 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது என்று தெரிவித்துள்ளது.

மொத்த வருவாய் நான்கு லட்சத்து 62 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்ததகாவும் அது கூறியுள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலக்கட்டத்தைவிட 21 சதவீதம் அதிகம் என்று நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஓடிஸா மாநில சட்டப்பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நேற்று பதவியேற்றுக் கொண்டனர்.

முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி, துணை முதலமைச்சர்கள், பிஜூ ஜனதாதள தலைவர் திரு நவின் பட்நாயக் உள்ளிட்டோர் பதவியேற்றனர்.

அவர்களுக்கு சட்டப்பேரவை இடைக்கால தலைவர் திரு ரணேந்தா பிரதாப் ஸ்வைன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்ச்சி இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

சட்டப்பேரவைத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நாளை நடைபெறவுள்ளது.

**[]<<<>>>[]**

சிக்கிம் மாநிலத்தில் நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மங்கன் மாவட்டத்தில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள **Lachung** மற்றும் சுங்தாங் மாவட்டங்களில் இப்பணிகள் முழுமுச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை சுமார் ஆயிரத்து 300 சுற்றுலாப் பயணிகள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

அவர்களுக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

மோசமான வானிலை காரணமாக கடந்த இரண்டு நாட்களாக விமானம் மூலம் மீட்புப் பணி நடைபெற இயலாத நிலையில், மீட்புப் பணிகள் அனைத்தும் சாலை வழியாகவே நடைபெற்றன.

அம்பிதாங் மாவட்டத்தில் சாலை சீரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததை அடுத்து இலகுரக வாகனங்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மாநிலத்தில் பொது விநியோக திட்டத்தின் கீழ் மே மாதத்திற்குரிய பருப்பு மற்றும் பாமா-யில் பெற்றுக்கொள்ளாத குடும்ப அட்டைதாரர்கள் அதனை இம்மாதம் முழுவதும் பெற்றுக் கொள்ளலாம் என மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் பொது விநியோக திட்டத்தின் மூலம் ஏழு லட்சம் மெட்ரிக் டன் துவரம் பருப்பம், 64 கோடியே 62 லட்சம் பாமாயில் பாகெட்டுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பொது விநியோக திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

தேர்தல் நன்னடத்தை விதிகளால் நடைமுறை சிக்கல்கள் ஏற்பட்ட நிலையில், துவரம் பருப்பு, பாமாயில் விநியோகம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி தவறான தகவல்களை தெரிவித்து வருவதாக திரு சக்கரபாணி அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிட்டள்ளார்.

[]<<<>>>[]

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் நாட்டுப்புற கலைஞர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள நாட்டுப்புற கலைஞர்கள் மற்றும் இதர கலைஞர்கள் தொழில் முறையாக பயணம் செய்யும்போது 50 சதவீத பயணக் கட்டண சலுகையுடன் பயணம் செய்யலாம் என்று மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இசை கருவிகள், தொழில் கருவிகளை கட்டணமில்லாமல் எடுத்துக் செல்லவும் வழிவகை செய்யப்பட்டுள்ளதாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.,

அவர்களுக்கு ஏற்கனவே நடைமுறையில் உள்ள சலுகைகள் தொடர்ந்து வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் நாடகக் கலைஞர்கள் எடுத்து வரும் கலைப்பொருட்கள் பிற பயணிகளுக்கு இடையூறுகள் இல்லாதபடி பாதுகாப்பான முறையில் வைக்கப்பட வேண்டுமென்றும் திரு சிவசங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

நிலுவை வழக்குகளுக்குத் தீர்வு காணும் வகையில் சிறப்பு லோக் அதாலத் அடுத்த மாதம் 29,-ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் மாதம் மூன்றாம் தேதிவரை நடைபெறும் என்ற உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

உச்சநீதிமன்றத்தின் 75-வது ஆண்டு தினத்தையொட்டி இந்த சிறப்பு லோக் அதாலத் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

மேற்குவங்க மாநிலம் டார்ஜிலிங் மாவட்டத்தில் நிகழ்ந்த ரயில் விபத்து குறித்த விசாரணையை ரயில்வே முதன்மை ஆணையர் திரு ஜானக்குமார் கார்க் தொடங்கியுள்ளார்.

இதற்கிடையே இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை பத்தாக அதிகரித்துள்ளது.

விபத்து நடந்த ரயில் வழித்தடம் சீரமைக்கப்பட்டு போக்குவரத்து நேற்று மீண்டும் தொடங்கியது.

[]<<<>>>[]

தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் இன்றும் நாளையும் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒரு சில பகுதிகளில் கன மழைக்கும் வாய்ப்பு உள்ளதாக அது கூறியுள்ளது.

இதனிடையே மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் நேற்று பரவலாக மழை பெய்துள்ளது.

காஞ்சிபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் நேற்று இரவு சுமார் இரண்டு மணி நேரம் கன மழை பெய்தது.

சென்னையிலும் நேற்று இரவு மிதமான மழை பெய்தது.

[]<<<>>>[]

உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் சூப்பர் எட்டு சுற்று ஆட்டங்கள் இன்று தொடங்குகிறது.

நார்த்சவுண்டில் நடைபெறவுள்ள முதல் போட்டியில் அமெரிக்கா – தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.,

பெங்களூருவில் இப்போட்டி பிற்பகல் மணி 1-30-க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்தியா முதல் ஆட்டத்தில் வெற்றிபெற்று முன்னிலை வகிக்கிறது.

**[]<<<>>>[]**

பின்லாந்தில் நடைபெற்று வரும் தடகளப் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா தங்கப்பதக்கம் வென்றார்.

துர்க் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் அவர் 85 புள்ளி ஒன்பது ஏழு மீட்டர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**[]<<<>>>[]**